## **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – உள்ளடக்கிய கல்வித் திட்டக்கூறு (தொடக்கநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை)

மாற்றுத் திறன் உள்ள மாணவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு சிறப்புப் பள்ளிகளில் கல்வியைப் பெற வேண்டும் என்ற பாரம்பரிய மனப்பான்மையை அகற்றி உள்ளடக்கிய கல்வி செயல்படுத்தப்படுகிறது.

இக்கல்விமுறையில் மாற்றுத் திறனாளி மாணவர்கள்

1. அனைவரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு கல்வி பயில வேண்டும்.
2. கற்றல் செயல்பாட்டில் சமமாக பங்கேற்க வேண்டும் மற்றும் பள்ளிகளின் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்க வேண்டும்.

அனைத்து குழந்தைகளும் பொதுவான கல்வி முறையைச் சேர்ந்தவர்கள் என்று உணரும் போது மட்டுமே உள்ளடக்கிய கல்வி சரியான முறையில் செயல்படுத்தப்படுகிறது என்று உணரப்படும்.

**3. தொலைநோக்கு பார்வை அறிக்கை:-**

**ஒருங்கிணைந்த கல்வி முறையில் பயிலும்** அனைவருக்கும் பள்ளிகளில் பாதுகாப்பான சூழலை வழங்குதல், தகுந்த கல்வி வழங்குதல் மற்றும் கல்வி பயில்வதற்கான தடைகளை நீக்குதல், உள்ளடங்கிய கல்வியின் நோக்கம்.

**மத்திய அரசின் கீழ் உள்ள 21 இயலாமைகள்**

**2016 ஆம் ஆண்டு ஆர்.பி.டபிள்யூ.டி சட்டத்தின்படி 21** குறைபாடுகளின் **பட்டியல்**

1. பார்வை இழப்பு
2. குறைந்த பார்வை
3. தொழுநோய் குணமடைந்தநபர்கள்
4. காது கேளாமை
5. உடல் இயக்க குறைபாடு
6. குள்ளத்தன்மை

7. அறிவுசார் இயலாமை

8. மனநோய்

9. மன இறுக்க கோளாறு அல்லது பிற உலக சிந்தனை இல்லாமை

10. மூளை முடக்கு வாதம்

11. தசைச் சிதைவு

12. நாள்பட்ட நரம்பியல் குறைபாடு

13. குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகள்

14. திசு பன்முக கடினமாதல்

15. பேச்சு மற்றும் மொழி குறைபாடு

16. சிவப்பணு குறைபாடு

17. இரத்தம் உறையாமை

18. அரிவாள் சிவப்பணு நோய்

19. காது கேளாதோர் உட்பட பல்வகை குறைபாடுகள்

20. அமில தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள்

21. நடுக்கு வாதம்

உள்ளடக்கிய கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள்:-

மாணவர் சார்ந்த செயல்பாடுகள்

- சிறப்பு தேவைகள் கொண்ட குழுந்தைகளை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீட்டு முகாம்கள்
- ஆரம்ப தலையீடு திட்டங்கள் (பிறந்த குழந்தை முதல் **6 வயது உடைய சிறப்பு** தேவைகள் கொண்ட குழுந்தைகளுக்கு சிகிச்சை சேவைகள் மற்றும் இளம் பெற்றோர்களுக்கு ஆலோசனை பயிற்சி பெற்றோர்கள் ஆதரவு
- சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புதல்
- சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கான சிறப்பு தேவை மையங்களில் பயிற்சி

- உயர் ஆதரவு தேவைகளைக் கொண்ட குழந்தைகள் **(வீட்டில் இருக்கும்)** வீட்டுப் பள்ளித் திட்டங்கள் வடிவமைத்தல், தனிப்பட்ட கல்வி, சிகிச்சை மற்றும் ஓய்வு நேர மேம்பாடு திட்டம்.

4. சிகிச்சை சேவைகள்:-
    - இந்த திட்டம் முக்கியமான தசை செயல்பாடுகள் மற்றும் புலனுணர்வு பயிற்சி கவனம் செலுத்துகிறது.

உள்ளடக்கிய விளையாட்டு நிகழ்வுகள்

ஆசிரியர் சார்ந்த செயல்பாடுகள்

- கல்வி மற்றும் சிகிச்சை முறை மேம்பாடு
- உள்ளடக்கிய கல்வியில் வல்லுநர்களுக்கான திறன் மேம்பாடு
- சிறப்பு கல்வியாளர்களுக்கான சேவைபயிற்சி
- ஆசிரியருக்கு பகுப்பாய்வு தேவை

வட்டார வள மையங்கள்:-

தமிழ்நாட்டில் மொத்தம் 842 வட்டார வள மையங்கள் உள்ளன, அவை பள்ளி தயார்நிலைத் திட்டங்களையும் சிகிச்சை சேவைகளையும் வழங்குகின்றன.

சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம்:-

அனைத்து மாவட்டங்களிலும் உள்ளடக்கிய கல்வி முறையை நிறைவேற்றுவதற்கு சமூகத்தில் உள்ள அனைவரும் பங்கேற்பதற்கான திட்டம்

பிற சேவைகள்

1. ஆலோசனை ச் சேவைகள்
2. ஆன்லைன் மருத்துவ சேவைகள்
3. ஆன்லைன் கல்வி சேவைகள்

ஒருங்கிணைந்த கல்விதிட்டத்தில் சிறப்பு தேவைகள் கொண்ட மாணவ மாணவியர்களுக்கான நன்மைகள்

1. புத்தகங்கள், எழுதுபொருட்கள் மற்றும் கற்றலுக்கான பொருட்கள்
2. சிகிச்சைக்கான கருவிகள் மற்றும் உபகரணங்களை அலிம்கோ (ஒரு பொதுத்துறை நிறுவனம்) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
3. வாசகர் படி, போக்குவரத்து படி
4. சிறப்பு குழந்தைகளை பள்ளிகளுக்கு அழைத்து வரும் துணைப்படி (Escort Allowance)
5. சிறப்புத் தேவைகள் கொண்ட பெண் குழந்தைகளுக்கான உதவித் தொகை
6. வள மையங்களுக்கான உதவியாளர் தொகை

இத்திட்டத்தின் செயல்திறன் விளைவு

1. சிறப்புத் தேவைகள் கொண்ட மாணவ/மாணவியர் உள்ளடக்கிய பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்தல்
2. அனைத்து குழந்தைகளுக்கும் முறையான கல்வி
3. உயர்நிலை பள்ளி வரை சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைகளை வெற்றிகரமாக ஒருங்கிணைத்தல்
4. குழந்தைகளின் திறன்களுக்கு இணையாக தனிப்பட்ட கல்வித் திட்டம்
5. குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஏற்ப கற்றல் பொருட்களைப் பயன்படுத்துதல்
6. தடைகள் இல்லாத விளையாட்டு மைதானங்கள்
7. சாய்வுதளங்கள் மற்றும் கைப்பிடிகள்
8. அணுகக்கூடிய கழிப்பறைகள்
9. அணுகக்கூடிய ஆய்வகங்கள், கணினி வகுப்பறைகள்
10. கற்றல் சூழலில் உள்ள அனைத்து இடங்களும் அணுகக்கூடியதாக இருத்தல்

முக்கிய சாதனை:-

1. அடையாளம் மற்றும் மதிப்பீட்டு முகாம்களின் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல்
2. வல்லுனர்களுடன் ஒரு நிபுணர் செயற்குழு உருவாக்கப்பட்டது
3. பிறதுறைகளுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியது
4. ஒரு உள் மதிப்பீடு மற்றும் தர குழுவை உருவாக்கியது
5. சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கான பிரத்யேக மொபைல் / வலை **செயலி** பயன்பாடு
6. அனைத்து நடவடிக்கைகளையும் **எண்ம** (டிஜிட்டல்) கண்காணிப்புக்கு முன்மொழிந்தது.

நிதி ஒதுக்கீடு :- (இலட்சத்தில்)

| | |
|---|---|
| தொடர் செலவினம்:- | |
| ஆரம்ப நிலை | 114.735 |
| தொடக்க நிலை | 7034.92 |
| மேல்நிலை | 1336.485 |
| தொடர் செலவினம்:- | |
| **உயர்** நிலை | 826 |
| 2021-2022 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு | 9312.14 |

பயனாளிகள்

| | |
|---|---|
| ஆரம்ப நிலைத் தலையீடு | 2,600 |
| ஆரம்ப நிலைத்தலையீடு மையங்களில் மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | 2,600 |

| | |
|---|---|
| ஆரம்ப நிலை 6 முதல் 14 ஆண்டுகள் | 1,21,321 |
| **உயர்நி**லை 14 முதல் 18 ஆண்டுகள் | 29,771 |
| மொத்த பயனாளிகள் எண்ணிக்கை | 1,51,092 |